Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF
Imapact Factor 3.5 · Monthly
Vol. 20, No. 02 (2026) 20 02 2026 149–154 TIRJTS-2026-0006

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

ஆண்டாள் மேகவிடு தூதில் இடம்பெறும் தகவல்தொடர்பு சிந்தனைகள்

முனைவர்.பா.அருள்ஜோதி[1,*]

[1] உதவிப்பேராசிரியை தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்

***Corresponding author:** முனைவர்.பா.அருள்ஜோதி, editor@tamilmanam.in

ARTICLE INFO

Article history
Received: 1 October 2026

Article ID
TIRJTS-2026-0006

Peer review
Double-blind peer review

Keywords
தூது இலக்கணம்-மேகவிடு தூது அமைப்பு- தூதுப் பொருளாகக் காரணம் வேங்கடவனின் பெருமைகள்-வேங்கடமலையின் செழுமை

ABSTRACT

ஆண்டாள் அருளிய நாச்சியார் திருமொழியின் எட்டாம் பதிகமான "மேகவிடு தூது", பக்தி இலக்கியத்தின் உச்சமாக மட்டுமல்லாமல், மிகச்சிறந்த தகவல்தொடர்பு சிந்தனைகளின் களஞ்சியமாகவும் திகழ்கிறது. இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் கொண்டு, திருவேங்கடமுடையானிடம் தன் காதலைத் தூதுரைக்க மேகங்களை ஆண்டாள் அனுப்பும் இப்பகுதி, நவீன தகவல்தொடர்பு கோட்பாடுகளோடு பொருந்துவதாய் அமைகின்றது. பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான ஆண்டாளின், நாச்சியார் திருமொழியில் இடம்பெற்றுள்ள 'மேகவிடு தூது' பகுதியை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

How to cite this article: முனைவர்.பா.அருள்ஜோதி (2026). ஆண்டாள் மேகவிடு தூதில் இடம்பெறும் தகவல்தொடர்பு சிந்தனைகள். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *20*(02), 149–59.
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆண்டாளின் படைப்புகள்

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான ஆண்டாள். அவரின் படைப்புகள் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் ஆகும். திருப்பாவை 30 பாசுரங்களைக் கொண்டது. மார்கழி மாதத்தில் பெண்கள் நோற்கும் நோன்பு பற்றியும், நீராட்டச் செய்திகள் பற்றிப் பாடப்பட்டுள்ளது.நாச்சியார் திருமொழி 143 பாசுரங்களைக்

கொண்டது. ஆண்டாள் திருமால் மீது கொண்ட காதலின் மொழியே நாச்சியார் திருமொழி. 'மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்' என்று மானுடனைக் கணவனாக மணம் முடிக்க மறுத்தவர். திருமால் மீது மாறாத காதல் கொண்டு அவனையே மணம் முடிக்க வேண்டும் என்று நோன்பு நோற்றவர். அவரின் காதல் மன உணர்வுகளின் வெளிப்பாடே நாச்சியார் திருமொழி என்னும் பெயரில் பத்துப் பத்துப் பாடலாக, பத்துப்பாடலுக்கு ஒரு தலைப்பாக பாடப்பட்டுள்ளது. அதில் ஒன்றே மேகவிடு தூது. மேகவிடு தூது தூது இலக்கணம் அமையப் பாடப்பட்டுள்ளது.

தூது இலக்கணம்

தூது என்பது தொழிற்பெயர். ஒருவர் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்கும் பொருட்டு தூதக அனுப்புவர். தூது அகத்திணைத் தூது புறத்திணைத் தூது என இரண்டாக வகைப்படுத்துவர். புறத்திணைத் தூதில் இதிகாச நூலான மகாபாரதத்தில் கண்ணன் தூதும், புறநானூற்றில் அதியமான் பொருட்டு ஔவை தொண்டைமானிடம் சென்ற தூதும் சிறப்பாகப் பேசப்படும்.தொல்காப்பியர் அகத்திணையியல் கற்பியலில் காமம் மிக்க கழிபடர் கிளவி எனத் தூது பற்றிய செய்தியைக் எடுத்துரைக்கின்றார் தூது செல்வதற்குரியவனாக.

"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்

பாணன் பாடினி இளையர் விருந்தினர்

கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்

யாத்த சிறப்பின வாயில்கள் என்ப"

எனப் பன்னிருவரைக் குறிப்பர். கலிவெண்பாவில் பாடப்பட வேண்டும் என்றும் உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும் தூதாக அனுப்பலாம் என்று இலக்கண விளக்கப் பாட்டியல் இதன் இலக்கணத்தை மொழிகின்றது. அந்நூற்பா.

"பயிறருங் கலிவெண் பாவி னாலே

உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்

சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்

பாட்டியல் புலவர் நாட்டினர் தெளிந்தே"

என்பதாம். அதே போல் முத்து வீரியம் என்னும் நூலும்,

"ஆணும் பெண்ணும் அவரவர் காதல்

பாணன் முதலிய உயர்திணை யோடும்

கிள்ளை முதலிய அஃறிணை யோடும்

சொல்லித் தூது போய்வா என்னக்

கலிவெண் பாவால் அறைவது தூது"

என மொழியும். பாணன் முதலிய பன்னிருவர் குறித்து தொல்காப்பியர் ஏற்கனவே கூறியிருக்க,

தமிழ் மொழியில் தமிழ்விடு தூது என்னும் நூல் மிகச் சிறப்புடையதாகப் பேசப்படுகின்றது. தமிழில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட தூது நூல்கள் வெளிவந்துள்ளன. தற்கால இலக்கிய வகையாகக் கருதப்படும் திரைப்படப் பாடல்களிலும் தூதைப் பாடுபொருளாகக் கொண்ட தூதுப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

மேகவிடு தூது அமைப்பு

ஆண்டாள் மேகவிடு தூது பகுதியில் பண்டைத் தமிழகத்தின் வடக்கு எல்லையாக இருந்த வடவேங்கடமலையில் எழுந்துள்ள வேங்கடவனிடம் மேகத்தைத் தூதாக அனுப்பி தன் நிலையைச் சொல்ல வேண்டுகின்றார். இதில் தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் குறிப்பிடும் தூது இலக்கணம் அமையப் பாடியுள்ளார். ஆண்டாள் பாடிய மேகவிடு தூது பத்துப் பாடல்களை உடையது. இவற்றில் மேகத்தின் சிறப்பு மேகத்தைத் தூது அனுப்புவதன் நோக்கம் வேங்கடமுடையானின் பெருமை வடவேங்கட மலையின் செழுமை காதல் கொண்ட தன் நெஞ்சின் நிலை ஆகியன அமையப் பாடப்பட்டுள்ளது.

மேகம் - தூதுப் பொருளாகக் காரணம்

”மேகத்தைத் தூது விட்டா திசை மாறிப் போருமோ?” என்று தற்காலத் திரைப்படப் பாடலில் நாயகி ஐயம் கொள்ள ஆண்டான் தன் மனநிலையை அறிவிக்கும் தூதுப் பொருளாக மேகத்தை அனுப்புகின்றார். மேகம் மழையைத் தரும் செய்தியை அறிவியல் கண்டுபிடிப்புகள் கண்டு அறியும் முன்னரே தமிழ் இலக்கியங்கள் அதனை வருணனை செய்தன. திருப்பாவையில் ஆண்டான் மழை பொழியும் இயல்பினை.

"ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்

ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி.

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்

பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்

ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,

தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,

வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்

மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்"

என மழை பொழியும் பாங்கினை அழகாக எடுத்துரைக்கின்றார்.

கடலில் உள்ள நீரை முகந்து மேகம் செல்லும் என்பதை சங்குகள் அதிகம் வளரும் கடலினை முன்பு அமுதம் கிடைக்கும் பொருட்டு மாதவன் கடைந்ததைப் போல் மேகங்களும் கடைந்து முகந்து கொண்டு வானை நோக்கிச் செல்கின்றது என மேகவிடு தூது பகுதியிலும் **'சங்க மாகடல் கடைந்தான் தண் முகில்காள்'**எனக் குறிக்கின்றார்.மழை பொழியும் காலம் இது என்பதை நன்கு அறிந்தே மழை பொழியும் என்பதை. **'கார்காலத்து எழுகின்ற கார்முகில்காள்'**என்கின்றார். மேகம் நல்லோர் தியோர் பாராது மழையைப் பொழியும். உலக உயிர்கள் வாழ பொழியும் என்பதனால் மேகத்தை **'அளியத்த மேகங்காள்'** என்கின்றார். கருணை மிக்க அந்தத மேகம் வான்மகளின் மானம் காக்கும் பொருட்டு மேல் ஆடையாய் விரிந்துள்ளது என்றும், மிகுந்த ஒளி வீசும் மின்னல் எழும் என்றும் அந்த மேகங்கள் ஒன்றாகத் திரண்டு வேங்கட மலையில் குடியிருப்பதனால் வேங்கடவனிடம் தன் நிலையை எடுத்துரைப்பதற்கு அதுவே சிறந்த பொருள் என் உணர்ந்து மேகத்தைத் தூதாக அனுப்புகின்றார்.

வேங்கடவனின் பெருமைகள்

"மாயோன் மேய காடுறை உலகமும்" என்று மிகப் பழங்காலத்திலேயே திருமால் வழிபாடு தமிழகத்தில் இருந்தமையை தொல்காப்பியர் தெளிவுபடுத்துகின்றார். திருமால் திருவேங்கட மலையில் திருவேங்கடவன் என்னும் பெயரில் எழுந்தருளியுள்ளான். நீர் என்னும் பொருளுடைய நாராயணன் கரிய நிறம் உடையவன். அதனை "**சாமத்தில் நிறம் கொண்ட தாளாளன்"**என்கின்றார். அதாவது சாமத்தின் நிறம் கருமை அந்த நிறம் உடையவன் என்பதை இவ்வாறு நயம்பட மேகத்திற்கு அடையாளப்படுத்துகின்றார்.

திருவேங்கடவன் தன் மார்வில் திருமகளை உடையவன் என்பதை 'திருமங்கை தங்கிள சீர்மார்வற்கு என மங்கை தங்குவதற்கு தன் மார்பை இடமாகத் தந்தவன் தனக்கும் ஓர் இடம் அளிப்பான் என்ற நம்பிக்கையோடு பாடுகின்றார்.

திருமால் பெருமைகளை மேகத்திற்கு எடுத்துக் கூற திருமால் எடுத்த அவதாரங்களில் சிலவற்றை எடுத்துக் கூறுகின்றார். திருமால் உலக உயிர்களைக் காக்கும் பொருட்டு பத்து அவதாரங்களை எடுத்தார். அவற்றில் கூர்ம அவதாரம், நரசிம்ம அவதாரம். வாமன அவதாரம் என்பதை அவை தேவர்கள் தமக்கு அமழ்தம் கிடைப்பதற்காக அசுரர்களோடு பாற்கடலைக் கடைந்த பொழுது மத்தினைத் தாங்கும் பாரமாய் ஆமை வடிவத்தில் திருமால் அவதாரம் எடுத்து வந்தார். அதனை, "சங்க மாகடல் கடைந்தான்" என்று கூர்ம அவதாரத்தையும், "ஊன் கொண்ட வள் உகிரால் இரணியனை உடல்

இடந்தான்" என்று நரசிம்ம அவதாரத்ததை பாராட்டுகின்றார். நரசிம்ம அவதாரத்தில் பிரகலாதனின் பக்தியை உலகுக்கு எடுத்துரைக்க நரசிம்மனாக அவதரித்து இரணியனை தன் கூர் உகிரால் (நகத்தால்) மார்பை இரண்டாகப் பிளந்தான் என்று அவன் வீரத்தினைப் புகழ்கின்றார்.

மேலும், வாமன அவதாரத்தில் மாவலியிடம் மூன்றடி நிலம் கேட்டு மூன்றாவது அடியாக மாவலியின் தலையில் கால் வைத்து பாதாளத்தில் தள்ளினான என்பதனை "மாவலியை நிலங் கொண்டான்" என்று பாராட்டுகின்றார். பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன் பாம்பிணை தனது அணையாக உடையவன் என்பதனை, "பாம்பு அணையான்" என்றும், "நாகத்தின் அணையான்" என்றும் புகழ்கின்றார்.

வேங்கடமலையின் செழுமை

வேங்கடமலையில் நாள் தோறும் மாமுகில்கள் வெண்முத்துக் களைப் போல் மழையைப் பொழிந்து கொண்டே இருக்கும். மேகம் தான்தெளிந்த நீர் அருவியாக வீழ்ந்துகொண்டே இருக்கும் அதனால் அங்குள்ள மரம், செடி, கொடிகளில் தேன் நிறைந்த மலர்கள் மலர்ந்திருக்கும் என்பதனை. **"தெண்நீர் பாய் வேங்கடம்"** என்றும். **"குளிர் அருவி வேங்கடம்"**என்றும், **"வேங்கடத்து தேன் கொண்ட மலர் சிதற"** என்றும் வேங்கட மலையின் பெருமையை எடுத்துரைக்கின்றார்.

ஆண்டாள் தன் மனநிலையை எடுத்துரைத்தல்

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு

உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்"

என்று திருப்பாவையிலும்,

"இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்

நம்மை உடையவன் நாராணயன்"

என்று நாச்சியார் திருமொழியில் திருமணக் கனவிலும் வலியுறுத்துகின்றார்.

காதல் வயப்பட்ட தன் மன நிலையையும் உடல் நிலையையும் மேகத்திடம் எடுத்துரைக்கின்றார். வேங்கடவனைக் காணாததனால் கண்களில் இருந்து கண்ணீர்கள் வீழ்ந்து கொண்டே இருக்கின்றது என்றும், இரவுப் பொழுதுகளில் தென்றல் தன்னை வருத்துகின்ற காரணத்தினால் உறக்கம் போயின என்றும், தன்மேனி எழில், நிறம் பொழிவு இழந்தன என்றும், கை வளைகள் புகழ் அழியும் படியாகத் தன்னை விட்டுப் போயின என்றும், அவையெல்லாம் மீண்டும் தன்னிடம் வரவேண்டுமாயின் வேங்கடவனின் அருள் பார்வை தன் மேல் விழ வேண்டும் என்கின்றார்.

தன் உடல் மெலிந்த நிலையை இரண்டு உவமைகள் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

"உலங்கு உண்ட விளங்கனிபோல் உள்மெலிப் புகுந்து என்னை

நலங்கொண்ட நாரணற்கு என் நடலை நோய் செப்புமினே"

என்கின்றார்.

அதாவது. விளங்கனியில் உள்ளே வண்டு புகுமானால் உள்ளே இருக்கும் சாற்றை முழுதும் அந்த வண்டு உண்டு விடுவதனால் மேல் ஓடு தின்னியதாகவும் உள்பகுதி எதுவும் இன்றி வெற்றிடமாகவும் இருக்கும். அதுபோல், நாராயணன் பற்றிய எண்ணங்கள் உள்ளே நிறைந்து தன் மேனியை வருத்துகின்றது என்கின்றார்.

மேலும், **"நீர் காலத்து எருக்கின் அம்பழ இலைபோல் வீழவேனை"** என்கின்றார்.

நீர் வற்றிப் போன பழுத்த எருக்க இலை சிறிது நாளில் தானாக செடியினின்று வீழ்ந்து விடும். அது போல் நாராயணன் தனக்கு அருள் செய்யாராகில் தன் உயிர் போம் என்பதனை நயம்பட எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு ஒரு பெண்ணின் பொழிவு இழப்பிற்கு காரணமான வேங்கடவனுக்கு இது பெருமை உடையது ஆகாது என்றும், தன் நிலைக்கு காரணமான நாராயணனை பிறர் பழி தூற்றுவார்களே என்று அஞ்சுகின்றார். இதனை "பெண் நீர்மை ஈடழிக்கும் இது தமக்கு ஓர் பெருமையே?" என்றும்,

"கதி என்றும் தான் ஆவான் கருதாது ஓர் பெண்-கொடியை

வதை செய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே?"

என்றும் கூறுவதால் அறியலாம்.

ஆழ்வார்கள் பன்னிருவருள் பெண் ஆழ்வாரான ஆண்டாள். திருமால் மீது மாறாதக் காதல் கொண்டதனால் மேகத்தைத் தூதுப் பொருளாகத் தேர்ந்தெடுக்கிறார். மேகத்தைத் தேர்ந்தெடுக்கக் காரணம் நிறப் பண்பினால் திருமாலோடு ஒன்றுபடுகிறது. உலகிற்கு கைமாறு கருதாமல் மழையை வாரி வழங்கும் தியாகம் வாய்க்கப் பெற்றமையால் குணத்தாலும் வேங்கடவனோடு பொருந்துகிறது. எனவே தனது விருப்பத்தை வஞ்சனையின்றி வேங்கடவனிடம் சேர்க்கும் நம்பகத்தன்மை மேகத்தின் மீது ஆண்டாளுக்கு ஏற்படுகிறது. எனவே மேகத்தை சிறந்த தகவல் தொடர்பு சாதனமாகத் தேர்ந்தெடுப்பதோடு வேங்கடவனிடம் மாலை வாங்கி வருமாறும் தூது அனுப்புகிறாள்.

குறிப்புதவி நூல்கள்

References

சங்கர நாராயணன் சி.டி (உ.ஆ), முதற்பதிப்பு -2002 , நாச்சியார் திருமொழி , தி .நகர் சென்னை -17, முல்லை நிலையம் , 9 பாரதி நகர் முதல் தெரு